# ஏன் கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் விட்டு வைக்கப்பட்டுள்ளனர்?

இப்படி நடந்தால் எப்படி இருக்கும் என கற்பனை செய்து பாருங்கள்: அதாவது, ஒரு மனிதன் சுவிஷேசத்தை கேட்டு புரிந்து கொண்டு, தன் பாவங்களில் இருந்து மனந்திரும்பி, கிறிஸ்துவுக்குள் ஞானஸ்நானம் பெற்ற அந்த நிமிடமே, தேவன் அந்த நபரின் உடலை ஒரு அழிவில்லா பொருளாக மாற்றி, அந்த நபரும் நித்திய வீடாகிய பரலோகம் செல்கிறார் என்று வைத்துக் கொள்வோம்; அது அருமையானதாக இருக்காதா? இந்த உலகப் பாடுகள், சோதனைகள் எதுவுமே அதற்குப்பின் இருக்காது. மேலும், ஒரு ஆத்துமா கூட தேவனிடம் சேராமல் இருக்காது! என்ன ஒரு அருமையான திட்டம் இது!

தேவன் ஏன் இப்படி ஒரு திட்டத்தைப் பற்றி நினைக்க வில்லை? ஆனால் கொஞ்சம் பொறுங்கள்! சரி, தேவ குடும்பத்தில் ஞானஸ்நானம் எடுத்து பிறந்தவுடனேயே எல்லா கிறிஸ்தவர்களும் தேவனிடத்தில் எடுத்துக் கொள்ளப்பட்டால், மற்றவர்களுக்கு இரட்சிப்பை கொடுக்கக் கூடிய வசனத்தை சொல்ல யார் இவ்வுலகில் இருப்பார்கள்? ஒருவர்கூட இருக்கமாட்டார்களே! அப்படிப்பட்ட நிலையில் சுவிஷேசத்தின் இரட்சிக்கின்ற வல்லமையானது திருச்சபை ஆரம்பமான முதல் நாளிலேயே முடிந்து போயிருக்குமே; அதன்பின் முழு உலகமும் இருளிலே மூழ்கியிருக்குமே!

அதனால் தான் நாம் இந்த அந்நிய சூழ்நிலையில், சாத்தான் அதிபதியாயிருக்கும் இவ்வுலகில் வாழ்ந்து வருகிறோம் அப்பொழுது தான் நாம் அனைவரும் பாவ இருளில் பிரகாசிக்கிற கிறிஸ்துவின் ஒளியாயிருப்போம். உங்களுடைய நிலைமையையே நினைத்துப் பாருங்கள்: அநேக நேரங்களில் ஏதோ ஒரு கரிசனையுள்ள கிறிஸ்தவரின் உங்கள் மீதான அன்பு தானே, நீங்கள் சத்தியத்தை கற்றுக் கொள்ள உதவியது? அதன் விளைவாக தான், நீங்கள் இங்கே இருந்து சாத்தான் கொண்டுவரும் எந்த சோதனைகளையும், பிரச்சனைகளையும் சந்தித்துக் கொண்டிருக்கிறீர்கள். **நித்திய தண்டனையில் இருந்து காப்பாற்றப்படும் ஆத்துமாக்கள் என்னும் கனிகளை கொடுக்கவே இவ்வுலகில் இருக்கிறீர்கள்**

தன்னை பின்பற்றினவர்களுக்கான தன்னுடைய பிரியா விடை (farewell) வார்த்தைகளில் மிக முக்கியமான இயேசுவின் கட்டளை, "...நீங்கள் உலகமெங்கும் போய், சர்வ சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தைப் பிரசங்கியுங்கள். விசுவாச முள்ளவனாகி ஞானஸ்நானம் பெற்றவன் இரட்சிக்கப்படுவான்; விசுவாசியாதவனோ ஆக்கினைக்குள்ளாகத் தீர்க்கப் படுவான்" (மாற்கு 16:15,16). காலப்போக்கில், இந்தக் கட்டளைக்கு அவர்கள் கீழ்படிந்ததின் விளைவாக, பெரிய உபத்திரவங்கள் தோன்றியது; மேலும், "சிதறிப்போனவர்கள் எங்குந்திரிந்து சுவிசேஷ வசனத்தைப் பிரசங்கித்தார்கள்" (அப்.8:4)." அந்த முதல் நூற்றாண்டு கிறிஸ்தவர்களின் அர்ப்பணிப்பினால் ஒரு தலைமுறைக் காலத்திற்குள், அப்போஸ்தலன் பவுல் ஏவுதலினால் இவ்வாறு எழுதுகிறார்: "அந்த நம்பிக்கையைக் குறித்து, நீங்கள் முன்னமே சத்திய வசனமாகிய சுவிசேஷத்தினாலே கேள்விப்பட்டீர்கள்; அந்தச் சுவிசேஷம் உலகமெங்கும் பரம்பிப் பலன்தருகிறதுபோல,..." (கொலோ 1:6).

அந்த கிறிஸ்தவர்களுக்கான கட்டளைகளும் சரி, அவர்கள் காலத்திற்குப் பின் சுமார் 2000 வருடங்கள் கடந்தாலும், செய்ய வேண்டிய வேலைகளும் சரி மாறவே இல்லை.

ஆனால், மக்கள் தொகை மாறியிருக்கிறது! ஒப்பீட்டில் மிகவும் குறுகிய எண்ணிக்கையில் உள்ள கிறிஸ்தவர்கள் எவ்வாறு சுமார் 7 ஆயிரம் கோடி மக்களுக்கு எவ்வாறு சுவிசேஷம் எடுத்துச் செல்ல முடியும்? இது மனிதனால் சாத்தியமா?

இந்த சுவிசேஷ வேலையானது மனிதனின் முயற்சியினால் மட்டுமே செய்யப்பட வேண்டும் எனில், அது சாத்தியமில்லை. ஆனால்," .... இதோ உலகத்தின் முடிவுபரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன்..." (மத்.28:20) என்று இயேசு வாக்களித்தார். மேலும் யோ. 14:18ல், " நான் உங்களை திக்கற்றவர்களாகவிடேன்..." என்று இயேசு வாக்குக் கொடுத்துள்ளார். சரி இவை கூறும் செய்தி என்ன? அதாவது, நமது கைகளில் அவர் கொடுத்துள்ள இந்த சுவிசேஷ வேலை இன்னும் அவருடையதே; மேலும் அதின் ஒவ்வொரு அடியிலும் (முயற்சியிலும்) அவர் நம்முடன் இருப்பார்.

நடைமுறை வாக்கியத்தில், அதன் அர்த்தம் என்ன? நாம் சரித்திரத்தை உற்றுப் பார்த்தால், ஒவ்வொரு காலத்திலும் தேவன், சபையானது உலகத்திற்கு சுவிசேஷம் கூறும்படியான உபகரணங்களை கொடுத்திருக்கிறார். தேவன் அவருடைய பங்கை செய்கிறார்; அவர் உபகரணங்களை நம்முடைய மேஜையின் மேல் போடுகிறார்; பிறகு கிறிஸ்தவர்கள் மற்றும் திருச்சபையானது அவர் கொடுத்துள்ளவைகளை பயன்படுத்த வேண்டுமா? இல்லையா? என முடிவு செய்ய வேண்டும்.

- இன்று இவ்வளவு பெரிய மக்கள் தொகைக்கு சுவிசேஷத்தை கொண்டு செல்ல **அனைவரும் ஆண்டவரின் கட்டளைக்கு ஏற்ப சுவிசேஷப் பணி செய்ய வேண்டும்.**
- "உலகமெங்கும் போய்" என்ற கட்டளையை நிறைவேற்ற கிறிஸ்தவர்கள், சுவிசேஷப் பணி செய்ய வெளிநாடுகளுக்கும் பிரயாணம் செல்ல ஆயத்தமாக இருக்க வேண்டும். இந்த சுதந்திரம் நமக்கு உள்ளது.
- மேலும் சுவிசேஷப் பணியை எங்கும் சென்று நாம் செய்வதற்கு ஏதுவாக, இன்று நாம் பல மொழிகளைக் கற்கும் வாய்ப்பும், மொழியாக்கம் செய்யும் திறனும் உள்ளது. மேலும் யாவரும் கற்கக்கூடிய மொழியாக ஆங்கிலமும் இருக்கிறது.
- இன்று உள்ள மக்கள் தொகை பெருக்கத்திற்கு சுவிசேஷம் சொல்ல, **முதல் நூற்றாண்டின்** உபகரணங்கள் மட்டும் போதாது என்று தேவனுக்கு தெரியும், அதனால் தான் அவர்களிடம் **இல்லாத உபகரணங்களைக் கூட நம்மிடம் தந்துள்ளார்.**
- வேதாகமம், உலகில் உள்ள எல்லா பெரிய மொழிகளிலும் இன்று கிடைக்கிறது; சிறிய மொழிகளிலும் அநேகவற்றில் கிடைக்கிறது; அதுவும் மிகக் குறைந்த விலையில். பாருங்கள்! இப்படிப்பட்ட **இலக்கியங்கள், நாம் சுவிசேஷம் சொல்ல செல்லுமுன்னதாகவே நமக்கு முன் அவர்களிடம் சென்று, வனாந்தரத்தில் பாதை அமைத்தது போல் இருக்கிறது.**
- உலகின் எந்த மூலைக்கும் கடிதங்களையும், நற்செய்தி நூல்களையும், வேத பாடங்களையும் அனுப்ப தபால் துறை இன்று நம்பகமாக உள்ளது.

  எங்கும் உள்ள அனைவரும் சுவிசேஷ வசனத்தைக் கேட்க வானொலி மற்றும் குறைந்த அலைவரிசை வானொலி பிரயோஜனமாக உள்ளது.
- அச்சு அலுவலகங்கள் (Printing Press), கணிப்பொறிகள் (Computers) மற்றும் ஜெராக்ஸ் போன்ற இயந்திரங்கள் அனைத்தும், செய்திகளை பல எண்ணிக்கைகளில் தேவைக்கேற்ப எடுத்துக்கொள்ள பயன்படுகின்றன.

  சாட்டிலைட் உதவியுடன் பிரசங்கங்களை பார்க்கக் கூடிய வசதியுடன் தொலைக்காட்சி (TV) இன்று உலகை திறந்து வைத்துள்ளது.
- அலைபேசி (Cell Phone) சேவையானது எந்த இடத்திலும் இன்று குறைந்த கட்டணத்தில் கிடைக்கிறது.
- தனிமைப்பட்ட மனிதனுக்குக் கூட, அளவுக்கு அதிகமாக உலகத்துடன் தொடர்பு கொள்ளக் கூடிய இணையம் (Internet) வசதி, இன்று உதவுகிறது. பல சபைகளின் இணையதளங்களில், பயன்பாட்டாளர்களின் வசதிக்காக பல ஆயிரம் வேதாகம செய்திகள் வலம் வருகின்றன.
- குறுந்தகடுகள் (CD/DVD), எண்ணற்ற பாடங்களை, செய்திகளை பதிந்து வைப்பதற்கான குறைந்த செலவிலான சாதனம் ஆகும்.
- **பல மொழிகளிலும் கிடைக்கும் வேதாகமங்களும், அவற்றின் பல பதிப்புகளும், விளக்கவுரைகளும் ஒத்த வாக்கியங்களும், இன்று சுவிசேஷத்தை எளிமையாக பிரபல்யமாக்கும் சாதனங்கள்/ உபகரணங்கள் ஆகும்.**

ஒவ்வொரு நாளும் இப்படிப்பட்ட வசதிகள் பெருகிக் கொண்டே இருக்கின்றன. அனால் அவற்றை பயன்படுத்தி, ஆண்டவரின் அவசர செய்தியை மக்களுக்கு எடுத்துச் செல்ல வேண்டிய நாம் என்ன செய்து கொண்டுருக்கிறோம்? உண்மையில், இப்படிப்பட்ட நவீன உபகரணங்களும் வசதிகளும், தேவன் இன்று சபையின் மூலமாய் உலகத்தின் ஒவ்வொரு சிருஷ்டிக்கும் சுவிஷேசத்தை கொண்டு செல்ல கொடுத்துள்ள ஆதாரங்கள் ஆகும். இவற்றை நாம் எடுத்து மெய்படுத்துவோமா?

இப்படி ஒரு கற்பனை கதை உண்டு. இயேசு பரலோகத்திற்கு திரும்ப சென்றபோது, பிரதான தூதனாகிய மிகாவேல் இயேசுவிடம் உற்சாகமாக, "இப்பொழுது எங்களுக்கு உலகத்தோற்றம் முதல் உம்முடைய விருப்பம் என்னவென்று தெரியும்! ஆகையால், நாங்கள் பரலோக தூதர் சேனை முழுவதுமாக சென்று, உம்முடைய சுவிசேஷமாகிய மகிமையுள்ள செய்தியை எல்லாருக்கும் தெரிவித்து வருகிறோம்!" என்று கூறினான்.

அதற்கு ஆண்டவர்,"இல்லை, வேண்டாம்! இது உங்கள் வேலை இல்லை" என்றார்.

"அப்படியானால் இது யாருடைய வேலை? "என்றான் மிகாவேல் தூதன்.

அதற்கு இயேசு,"என்னுடைய சிஷர்களாகிய என்னைப் பின்பற்றுகிற அனைவரிடமும் இந்த வேலையை நான் கொடுத்துள்ளேன்" என்றார். மிகாவேல் அதிர்ச்சியுடன், "இந்த வேலையை அவர்களிடமா கொடுத்துள்ளீர்? ஆனால் ஆண்டவரே, உமக்கே தெரியும் மனிதர்களை நம்ப முடியாதே! ஆதாம், உலகத்தில் பாவத்தை கொண்டுவந்தான். பேதுரு, உம்மை மறுதலித்தான். யூதாஸ் காட்டிக்கொடுத்தான். இந்த மனிதர்கள் உம்மை மறுபடியும் தோற்கச் செய்தால் நீர் என்ன செய்வீர்? அப்படிப்பட்ட சூழ்நிலையில் உம்மிடம் இந்த சுவிசேஷ செய்தியை அறிவிக்க வேறு திட்டம் உண்டா?" என்றான். அதற்கு இயேசு கூறிய பதில், "இல்லை, மிகாவேல்: **என்னிடம் வேறு திட்டம் எதுவும் இல்லை"**

பிரியமானவர்களே! தனிப்பட்ட கிறிஸ்தவர்களாகிய மற்றும் திருச்சபையாகிய, நம்மீது ஆண்டவர் வைத்துள்ள இந்த நம்பிக்கைக்காக என்ன செய்ய போகிறோம்? உங்கள் வேலையின் மத்தியிலும், ஆண்டவருக்கு ஊழியம் செய்யும் விருப்பம் உங்களுக்கு இருந்தால் எங்களிடம் தொடர்பு கொள்ளுங்கள்.

*- பெட்டி சோட்*

தமிழன் TV ஞாயிறு காலை 6-45
வெள்ளி காலை 6-00

**கிருபையுள்ள வார்த்தை T.V. நிகழ்ச்சிகள்**

தமிழன் T.V.

ஞாயிற்றுக்கிழமை காலை 6.45மணி


செவ்வாய்க்கிழமை இரவு 9.30மணி

**இப்பகுதியில் எங்களுடன் தொடர்பு கொள்ள:**

# ஏன் கிறிஸ்தவர்கள் இவ்வுலகில் விட்டு வைக்கப்பட்டுள்ளனர்?

**Why are Christians left in this world?**

*J.C & Betty Choate*




தமிழ், ஆங்கில தபால்வழி பைபிள் பாடங்கள், பத்திரிக்கைகள் பெற

**கிருபையுள்ள வார்த்தை**

தபால் பெட்டி - 15, அரசரடி, மதுரை - 625 016.

போன் : 92 4421 4421, 92 4431 4431

Email : obey2jesus@gmail.com